பொதுக் காலத்தின் நான்காம் ஞாயிறு - A ஆண்டு

முதல் வாசகம் : செப் 2:3, 3:12-13
இரண்டாம் வாசகம்: 1 கொரி 1:26-31
நற்செய்தி வாசகம்: மத் 5: 1-12

முன்னுரை:

ழிப்போக்கர் ஒருவர் கட்டட வேலை நடந்துக் கொண்டிருந்த ஒரு இடத்தில் தன் பயணத்தை நிறத்திக் கொண்டு அங்கிருந்த முதிர் வயதுடைய கட்டடத் தொழிலாளியிடம் "என்னக் கட்டிக்கொண்டிருக் கிறீர்கள்? என்றுக் கேட்டார். அதற்கு அந்த முதியவர் "நான் என் வாழ்நாளில் சநதிக்கவே சந்திக்காக, ஆனால் இந்த இடத்தைப் புகலிடமாகக் கொள்வோருக்கான ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்" என்றார். அதைக் கேட்ட அந்த வழிப்போக்கர் "இவர் சம்மா கற்களை அடுக்கிக் கொண்டிருக்கும் பணியை செய்துக் கொண்டிருக்கவில்லை மாறாக தனக்குப் பின்னும் நிலைத்து நிற்கக் கூடிய ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்" என்பதைப் புரிந்துக கொண்டார்.
நமது வாழ்வும் இப்படித் தான் இருக்கிறது.
நாமும் நமது வாழ்வில் ஒவ்வொன்றாகத் தேர்வு செய்து நமது இதயம் வாழக்கூடிய உள்ளார்ந்த அகத்தைக கட்டிக் கொண்டிருக்கிறோம். சில நாட்கிளல் நாம் அழகாக நன்றாகக் கட்டுகிறோம். சில நாட்களில் அது சரியாக இருப்பதில்லை.
ஆனால் இறைவன் பொறுமையாக நாம் எதை எப்படிக் கட்டவேண்டும் என்பதை, நமது வாழ்வுக்குப் பொருளையும் மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடிய விதத்தில் கட்டுவதற்கான வழிகளைக் காட்டிக கெண்டுத்தான் இருக்கிறார்.

இன்றைய நற்செய்தி நமது வாழ்வு எத்தன்மையானதாக இருக்க வேண்டும் என்பதற்னா வரையறைகளை வகத்தளிக்கும் மலைப் பொழிவாக கொடுக்கப்பட்டுள்ளது.
முழுமையான வாழ்விற்கான இயேசுவின் தொலைநோக்காக இது அமைந்துள்ளது.
அவை நமக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அல்ல. ஆனால் நாம் எப்படி கண்ணியமாக வாழ வேண்டும் என்பதற்கான அழைப்பாக உள்ளது. அது எப்படிப்பட்ட அழைப்பு என்றால் நாம் சரியானதைத் தேட வேண்டும் என்றும் நமது தேடல் காயப்பட்ட இடங்களுக்கும் நம் இரக்கத்தைக் கொண்டு செல்லக் கூடியதாக, தாழ்ச்சி நிறைந்த இதயத்தோடு கடவுளில் நம்பிக்கை வைக்கும் தேடலாக அமைய வேண்டும்.
திருப்பலியைத் துவங்கதம் முன்பாக நாம் நம் இறைவனை நம்மில் உள்ளதை சரிசெய்து மாற்றிக் கட்ட வேண்டியதை கட்டியெழுப்பி நாம் உருவாக்கும் இல்லம் அவரால் தொடப்பட்டு அது உறுதி வாய்ந்ததாக,

அழகு மிக்கதாக, இறைவனின் ஆசீரால் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்று வேண்டுவோம்.

மறையுரை:
முழுமையான வாழ்விற்கான அளவீடும் - இறைவனின் வாழ்த்தும்.

பல்லாண்டுகளாக நேர்மையானத் தன் பணியை செய்து வந்த தச்சுத் தொழிலாளி ஒருவர் இருந்தார். ஒருநாள் அவரது முதலாளி அவர் இறுதியான ஒரு வீடு கட்ட வேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டார். அவர் அதை ஒப்புக் கொண்டார். ஆனால் நீண்ட காலம் அந்தத் தொழிலை செய்ததால் சலிப்புற்ற அவருக்கு அந்த வீட்டைக கட்டுவதில் அவரது கவனம முழுமைாக செல்லவில்லை. அவர் மலிவான விலையில் பொருள்களை வாங்கி அவசர அவசரமாகக் கட்டலானர். செய்த செயலை நேர்த்தியாக செய்யவில்லை. வீடு கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அந்த தொழிலாளியின் முதலாளி அவரிடம் ஒரு சாவியை அளித்து "நீர் கட்டிய இந்த வீடு உமக்கானதுதான். இது நான் உமக்கு அளிக்கும் பரிசு. உங்களுக்கு நன்றி". அந்த தச்சுத் தொழிலாளிக்கு பேச்சே வரவில்லை. அவர் செய்த தரமற்ற செயலே அவருக்கு பரிசாக வந்தது.

வாழ்வு என்பது நாம் கட்டும் கட்டடம்.
இயேசு அதைக் கட்டுவதற்கான குறியீடாக மலைப் பொழிவை நமக்கு வழங்குகிறார். அதன் வாயிலாக நமது வாழ்வு - நமது உள்ளமாகிய இல்லம் உறுதிமிக்கதாக, அழகானதாக, முழுமையானதாக அமையும்.

மலைப்பொழிவானது நமது முழுமையான வாழ்வுக்கு இயேசு வழங்கும் மளவீடாகவும், அதை எற்று வாழ்பவர்களக்கு கடவுளின் வாழ்த்தைப் (ஆசீரை) பெற்றுத் தருவதாகவும் இருக்கிறது.
அந்த அளவீகளின் - மலைப்பொழிவின் பாதையில் பயணிப்போம். அவற்றை புரிந்துக் கொள்ள சிறு கதைகளும் வழங்கப்படுகின்றன.

1. கனிவுடையோர் பேறபெற்றோர் - அகிம்சையின் வலிமை :
சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பல்கலைகழகப் பேராசிரியர் தன் வகுப்பிற்குள் நழைந்தபோது இரு மாணவர்கள் எதைக் குறித்தோ சப்தமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவா கோபத்திலி கொப்பளித்துக் கொண்டு சண்டையிட தயாராக இருந்தார். மற்றவர் அதையாக இருந்தார் அவர் மற்றவரை நோக்கி "நான் உன்னை அமதித்து மனம் புண்படச் செய்ய விரும்பவில்லை. ஏனெனில நான் உன்னை என் நண்பனாகவே கருதுகிறேன். ஆனால் தற்போது நீ என்னை நண்பனானகப் பார்க்க விரும்பவில்லை என்றுத் தெரிகிறது" என்றார். கோபத்தின் உச்சியிலிருந்த மாணவனுக்கு தன் நண்பனின் அமைதியான நடத்தை மனத்தை உருக்கியது. கோபக்காரனான அவன் மனதுருகி அழுதான். "நான் என்னோடு யாரும் இனறு சண்டைப் போடக்கூடாது எனறே எண்ணினேன்" என்றான்.

கனிவாக. பொறுமைாக இருப்பது பலகீனமல்ல. அது குழம்பிய நேரத்தில் வந்த வலிமை. அது தனது கோபமான, கடுமைான நேரத்திலும் தன்னைத் தானே அடக்கிளயாளும் ஆளுமை. அது கோபத்தடனான தாக்குதலைத் தடுத்து நிறுத்த உருவாகும் கோபத்தை தடுப்பதற்கான துணிவு - அது வாய்வார்த்தைகளால் ஏற்படக்கூடிய கொடுமை உட்படத் தடுத்து நிறுத்தும் ஆற்றல்.

உலக அளவில் பார்க்கும் போது மகாத்மா காந்தியின் அஹிம்சை கொள்கை, மாாட்டின் லூதா கிங் அவர்களின் அஹஜம்சா வழிப் பின்பற்றுதல் 1989ல் நடத்தப்பட்ட அமைதியடன் சூகூடிய செபவழிபாட்டு இயக்கம்.
கனிவுடையோர் உலகை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் ஏனெனில் அவர்கள உலகை மாற்றியமைக்கும் திறன் படைத்தவர்கள்.
கனிவுடையோா பேறுபெற்றோர் -- அகிம்சை வழி நடப்போர் பேறுபெற்றோாட -- உலகிலிருந்து ஆயுதங்களை அகற்றுவோர் பேறுபெற்றோர்இ

நீதி நிலைநாட்டும் வேட்கைக் கொண்டோர் பேறு பெற்றோர் -- கடவுளின் வழிக்காக ஏங்குவோர்

ஒருநாள் ஒரு தொழிவதிபர் ஒரு வணிகவளாகத்தில் தான் ஙாக்யி உணவுப் பெகாருள்களுக்காகப் பணம் செலுத்த முடியாமல் தவித்து நின்ற ஒரு பெ்ண்ணுக்காள பணத்தை செலுத்தி உதவி செய்தார். அந்தப் பெண்மனி அந்த மனிதரிடம் தனக்காக அவர் ஏன் பணம் செலுத்தினர் என்றக் கேட்டார். அதற்கு பதிலளித்த அவர் ''நான் இவ்வுலகத்தில் நன்மையை / நற்செயல்களை மட்டுமே செய்யக் கூடிய மனிதர்கள் வாழ வேண்டும் என விரும்புகிறேன். அதை இன்றே என்னிலிருந்துத் துவங்க விரும்பினேன்''. என்றார்.

இந்த சிறிய செயல்தான் இயேசு விரும்பிய -- தான் மட்டுமல்ல உலகமே நறடசெயல் செய்வோரால் நிரம்ப வேண்டும் என்று எ்ண்ணியதை சுட்டிக்காட்டுகிறது.

விவிலியத்தில் நேத்மை என்பது என்பது வெறம் நீதி வழங்குதல் மட்டுமல்ல. அது இறை மனிதருக்கிடையிலான நல்லுறவு -- அத்துடன் சக மனிதருடனான நல்லுறவும் கூ.

இயேசு ''நீதியை நிலைநாட்டும் வேட்கைக் கெண்டோரே நிங்கள் நிறைவு பெறவீர்கள்'' என்கிறார். அதிலும் ''ஒருவேலை நிறைவடைய மாட்டீர்கள் அல்லது என்றோ ஒருநாள் நிறைவடைவீர்கள்'' என்று கூறவில்லை. அன்றே அப்போதே ''நிறைவு பெறுவர்'' என்கிறார்.

3. இரக்கமுடையோர் போறுபெற்றோர்'' -- மென்மையான இதயத்தின் மகிமை

ஒரு இளம் செவிலியர் தான் எவ்வளவு தான் பரிவோடும் இரக்கத்தோடும் பார்த்துக் கொண்டாலும் தன்னிடம் கடுமையாக நடந்துக் கொண்ட முதியவர் ஒருவரைக் குறித்துப் பகிர்ந்துக் கொண்டார். மற்ற எந்த செவிலியரும் அவரை கவனிப்பதில்லை. அவரை தவித்தனர். அந்த இளம் செவிலியர் கூறினார் ''அவர் தனிமையாக இருப்பதை உணர்கிறார். அத அவரை பாதித்துள்ளது'' என்றார். ஒருநாள் அந்த பெரியவர் அந்த இளம் செவிலியரிடம் ''நீங்கள் என்னைப் புறக்கணிக்காதுப் பார்த்துக் கொண்டதற்காக நன்றி'' என்றுக் கூறினார். அந்த இளம் செவிலியரின் மென்மையான இதயம் அநதப் பெரியவரை மாற்றத்திற்குட்படுத்தி0யது. இரக்கம் அவர்கள் இருவரையும் மாற்றத்திற்குட்படுத்தியது.

இரக்கம் என்பது -

- நான் மனிதர்கள் எதற்குத் தகுதியானவர்களாக இருக்கிறார்களோ அந்த நிலையிலேயே அவர்களை நடத்துவது இல்லை
- இறைவன் எனக்குக் கொடுத்துள்ள நற்பண்புகளான பொறுமை, அன்புடனான ஆர்வம், சரியான புரிதல் ஆகியவற்றையே மற்றவருக்கும் வழங்குவேன்

இயேசு அவர்களைக் குறித்து ''அவர்கள் இரக்கம் பெறுவர்'' என்று சொல்லும்போது அவர் எதைப் பற்றிக் கூறுகிறார் என்றால் '' நீங்கள் மற்றவர்களுக்கு கடவுளின் இதயத்தைக் கொடுங்கள். அப்படி செய்தால் கடவுள் தம் இதயத்தை உங்களுக்கு அளிப்பார்'' என்கிறார். இரக்கம் என்பது இறையாட்சியின் புழக்கத்திலிருக்கும் ஒரு உயர்வான நாணயத்திற்கு ஒ்ப்பானது.

4. ''துய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்'' -- கடவுளை புதியக் கோணத்தில் பார்ப்பது.

ஒரு சிறமி தன் பாட்டியிடம் ''நீங்கள் கடவுளை எப்படிக் காண்கிறீர்கள்?'' என்றுக் கேட்டாள. அதற்கு பாட்டி ''உன் இதயம் ஆழ்ந்த அமைதியில் இருக்கும்போது நீ இறைவனை எஙகெங்கும் காண இயலும். சிறுமி சற்று நேர அமைதிக்குப் பின் தன் பாட்டியிடம் கிசுகிசுத்தாள் ''இன்ற நான் கடவுளை கதிரவனின் உதயத்தின் போதக்க கண்டேன் என்று எண்ணுகிறேன்'' .

தூய்மையான இதயம் என்றால் அதில் குறையோ, கறையோ இல்லாது இருப்பது என்றுப் பொருள் அவ்ல
அதன் பொருள் என்னவென்றால் இயேசுவுடனான உறவில் விரிசல இல்லாத இதயமாக இருக்க வேண்டும். தனட இதயத்தில் வாழும் இயேசுவிலிருந்து விலகிடாத இதயமாக அது இருத்தல் வேண்டும்.
அதில் வாழ்பவர் இயோசுவான மட்டுமே இருத்தல் வேண்டும்.

ஒரு தூய்மையான இதயம் உலகத்தை வேறு விதமாகப் பார்க்கும். --

- சில நிகழ்வகளை உலகம் தற்செயலாக அல்லது திடீரென நடக்கும் ஒதத நிகழ்வாகப் பார்க்கும் போது தூய்மையான இதயம் அதை இறைப்பராமரிப்பாக பாாக்கிறது.
- அயற்கை சார்ந்த நிகழடவுகளின் போது உலகம் அதில் இயற்கையின் சக்தியைக் காணும். ஆனால் தூய இயதமோ அதில் படைத்தரைக் காணுமி.
- மற்றவர்கள் ஒரு நிகழ்வைத துயர சம்பவமாகப் பார்க்கும் போது தூய இதயம் அதை கடவுளின் மறைவான உடனிருப்பைக் காணும்.

''எதையும் ஒருவர் தமட இதயத்தாலட தான் தெளிவாகக் காண முடியுளம்'' என்கிறார் புனித எக்ஸ்யூபரே

தூய இதயம் படைத்தோர் ஏற்கனவே கடவுள் இவ்வுலகத்தில் இரப்பதைக் கண்டுக் கொண்டுவிட்டனர்.

5. ''எழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்'' - இறைவனின் முன் வெற்றுக் கரங்களுடன் நிற்றல்

ஒருப் பணக்காரப் பெண் ஒருமுறை அன்னை தெரேசாவைப் பார்த்து '' அன்னையே நான் ஏழைகளுக்கு உதவ விரும்புகிறேன். இப்போது நான் உங்களுக்குத் நான் என்ன தரவேண்டும்?'' என்றுக் கேட்டார். அன்னை அதற்கு ''உங்கள் கரங்களைத் தாருங்கள்'' என்றார். அந்தப் பெண் மிகவே குழம்பிப் போனாள். அன்னை தெரெசா கூறினார் ''ஆம் உங்கள் கரங்களை இந்த மன்களுக்கு உணவை பரிமாற மற்றப் பொருள்களை எடுத்துத் தரக் '' கொடுத்து'' உதவுங்கள். அந்த உதவிதான் பணத்தால் வாங்க முடியாதப் பரிசு'' என்றுக் கூறினார்.

ஏழையரின் உள்ளம் என்பது ''கடவுளை மட்டுமே சார்ந்து வாழ்வது. அப்படி வாழும் போது அவர்களுக்குக் கிடைக்கும் அனைத்துமே அவர் தரும் பரிசாகவே இருக்கும்.''
இது ஒரு குழந்தையின் உள்ளத்திற்கு ஒப்பானது. ''இறைவா எனது அனைத்திலும் நீர் இருக்க வேண்டும். அதுவே எனக்கு மிகவும் தேவையானது'' என்ற மனநிலை.

இறைவனின் முன்பாக நிற்கும் வெற்றுக் கையுடன் நிற்பவர் -- அதிலும் நன்றி உணர்வுடன் நிற்பவர் கரங்கள் அவரால் நிரப்பப்படும். இயேசு அவர்களைப் பார்த்துக் கூறுகிறார் ''ஏனெனில் லிண்ணரசு அவர்களுக்கு உரியது'' என்கிறார். இயேசு இனிமேல் விண்ணரசு கிடைக்கும் என்றுக் கூறவில்லை. இப்பொழுதே இங்கு உடனே வீண்ணரசு அவர்களுக்கு உரிமையக்கப்படுகிறது. அவாகள் இப்போதே இறைவனின் உலகில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள்.

6 துயருருவோர் பேறுபெற்றோர் - இத்தகைய இதயங்கள துயரங்களைப் புறக்கணியாதவர்கள்
ஒரு இளம் ஆசிரியை தினமும் தன் வகுப்புக்கு ஒரு குழந்தை மட்டும் பசியோடும் சோர்வோடும் வகுப்புக்கு வருவதை கவனித்தார். அந்த பிள்ளையின் பிரச்சனையை உணர்ந்துக் கொண்ட அவர் அதை புறந்தள்ளாமல் அவரே தினமும் பள்ளிக்கு சீக்கிரமாக வநது அந்த குழந்கைக்குக் காலை உணவை அளித்து வகுபபு துவங்கும் வரை அந்தப் பிள்ளை உறங்கி ஓய்வெடுக்கவும் வழி செய்தார். அவருடன் பணியாற்றும சக ஆசிரியர்கள் ''நீ அந்தப் பிள்ளைக்காக அதிகமான சிரமத்தை நீ ஏற்றுக் கொள்கிறாய்'' என்றுக் கூறி வந்தனர். அதற்க அவர் அளித்த பதில் ''அப்பிள்ளைப் படும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு என்னால் பாராமுகமாய் இருக்க முடியாது''.

இயேசு இதைத் தான் கூறுகிறார். மற்றபடி நமது கவலைகளைக் குறித்து அவர் இங்குக் குறிப்பிடவில்லை. ஆனால் பிற்ர் படும் துயரைக் கண்டு மனதுருகுவதையே. அதை புறக்கணிக்கா திருப்பதையே அவா இங்குக் குறிப்பிடுகிறார்.

''ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்'' -- அவர்கள் பெறும் ஆறுதல் வெறும் வார்த்தைகளில் அடங்கிவிடுபவை அல்ல. ஆனால் அது இறைவன் அவர்கள் வாழ்வில் செயல்படுவதில், அவர்கள் வாழ்வில் ஊடுருவுவதில், அவர்களுக்கு அளிக்கப்படும் இறைவல்லமையில் அடங்கியுள்ளது.

இதற்கு சிறந்ததொரு உதாரணம் - அன்னை மரியா.

இயேசுவின் மலைப்பொழிவையும், அன்னை மரியாவின் புரட்சிப்பண்ணையும ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவை ஒன்றையொன்று பிரதிபலிப்பதைக் கண்டுணரலாம்.

அன்னை மரி

- அவரது இதயம் ஏழையரின் இதயம் -- ''ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.
- அவரது இதயம் தூய்மையானது -- ''உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்''
- அவரது இதயம் இரக்கமுடையது -- அவரே இயேசு எனும் இரக்கத்தின் முகத்தை உலகிற்கு அளித்தவர்.
- அவரது இதயம் நீதியை நிலைநாட்ட லிழைவது -- தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.
- அவரது இதயம் கனிவுடையது -- அவர் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை மாறாக தன்னிடம் உள்ளதை முழுமையாக அளிப்பவர்.

- அவரது இதயம் துன்புறுவோருடன் இருப்பது - கிறிஸ்துவோடு அவர் இவ்வுலகிற்காகத் துன்பங்
களை ஏற்றுக் கொள்பவர்.

எனவே தான் அவர் தன்னைக் குறித்து ”இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்” என்றுக் கூறுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை.
இறைவனின் இடையறாத வாழ்த்து அவர் மீது முழுமையாகத் தங்கியுள்ளது.

இயேசவின் புத்துலகிற்கான கனவு:

மலைப்பொழிவு இயேசுவின் -- கடவுளின் -- புத்துலகிற்கானக கனவு
முதலில் அது சாத்தியமில்லாத ஒ்ன்றைப் போன்றுத் தோன்றியது
அனால் தற்போது இதை ஒரு முழுமையன மனிதனின் அடையாளமாக வர்ணிக்கின்றனர் - இறைவனில் முழுமையான உயிர்த்துடிப்புடன் வாழும் ஒரு மனிதனுக்கு ஒப்பிடப்படுகிறது.

மலைப்பொழிவின்படி வாழும் போது அந்த வாழ்வு தவறாகப் புரிந்தக் கொள்ளப்படவும், விமர்சிக்கப்படவும், துன்பத்திற்கு ஆளாக்கவும்படும். ஆனால் அத்தகைய வாழ்வை வாழ்வோருக்கு அது அவர்களுக்கு இவ்வுலகம் தர இயலாத முழமையான விடுதலையை, மகிழ்ச்சியையும், உள்ளார்ந்த வலிமையையும் அளிக்கிறது.

நாம் மலைப்பொழிவை வாழும்போது அதிலும் முற்றிலும் சரியான முறையில் சிலவற்றைக் கடைப்பிடிக்காது இருந்தாலும், முதலில் நமக்குள் ஒரு புதிய உலகம் உருவாவாதையும் பின்னா நம்மைச் சுற்றி அது வளர்வதையும் காணமுடியும்.

ஆலிவ் மரத்தை பயிரிட்ட மனிதனின் கதை --

மத்திய கிழக்கு நாடுகள் ஒன்றில் வாழ்ந்த மனிதன் ஆலிவ் மரங்களைத் தன்நாட்டில் பயிரிட்டதுக் குறித்த ஒரு பழமையானக் கதை இது --

மத்திய கிழக்கு நாடுகள் ஒன்றில் வாழ்ந்த மனிதன் ஆலிவ் மரங்களைத் தன்நாட்டில் பயிரிட்டபோது அதை கவனித்த வழிப்போக்கன் அவனது செயலைக் கண்டு எள்ளி நகையாடி ”இந்த வயதில நீ இந்த ஆலிவ் மரத்தை நடுகிறாயே இதன் பழங்களை உண்ணும் காலம்வரை நீ அத்தனை ஆண்டு உயிருடன் இருக்கப் போவதில்லையே?” என்றான். அந்த மனிதன் தன்னை எள்ளி நகையாடிய மனிதனிடம் ”மற்றவர்கள் நட்டு வளர்த்த மரங்களிலிருந்து நான் பழங்களை உண்கிறேன். எனக்குப் பின் வருபவ்கள் இந்த மரத்தின் பழங்களை உ்ண்ண வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் இந்த மரத்தை இப்போது நட்டு வளர்க்க விரும்புகிறேன்” என்று பதிலளித்தாா்.

**இயேசுவின் மலைப்பொழிவின் இலட்சியமும் இதுவே**
**நாம் நமக்காக மட்டும் என வாழவில்லை**
**நாம் இயேசுவின் கனவை இவ்வுலகில் உண்மையக்கிட அவர் கனவு கண்டதைப் போன்ற --**
**இரக்கமுள்ள, தூய்மையும், எளிமையும், நீதியும் நிறைந்த ஒரு உலகம் இம்மண்ணில் துளீர்க்க - அத்தகைய உலகைக் கடடியமைக்க வேண்டும்.**

**மலைப் பொழிவு கற்பிக்கும் இந்த வழியில் வாழ்ந்திட தேர்ந்துக் கொண்டுள்ள நீங்கள் இறையாசீரால் நிரம்புவீராக**
**இறைவனின் வாழ்த்தொலி உம்மீது தங்கி இருப்பதாக**
**ஆமென்.**